பக்கங்கள்:-12

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | ஆடி 19 | வெள்ளிக்கிழமை | 04.08.2023 | அதிர்வு 03

## இரு வேறு பகுதிகளில் இரண்டு சடலங்கள் மீட்பு

இரு வேறு இடங்களில் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் – ஜப்பான் நட்புறவுப் பாலத்துக்கு அருகிலுள்ள கடற்கரையிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. 06

# ராஜபக்ஷக்களின் எச்சரிக்கையையும் மீறி ரணிலை ஆதரிக்கும் மொட்டுத் தரப்பினர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை வலுப்படுத்தும் நோக்கில் புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்பதில் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா தலைமையிலான ஆளும் கட்சியினர் உறுதியாக உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்விடயத்தில், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கடுமையான எச்சரிக்கைகள் மற்றும் எதிர்ப்பையும் மீறி, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா மற்றும் அவரது சக கட்சி உறுப்பினர்களின் அண்மைய செயற்பாடுகள் குறித்து, பொதுஜன 06






# வடக்கின் உச்சியில் 4 இடங்கள் புராதன மையங்களாக அறிவிப்பு

## பறாளாய் ஆலய அரச மரம், கீரிமலையில் தீர்த்தக் கேணிகள் பருத்தித்துறை சுங்கக் கட்டம், இளவாலையில் தேவாலயம்

-எஸ்.நிதர்ஷன்-

**கொழும்பு, ஓகஸ்ட் 04**

**சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயப் பகுதியில் உள்ள அரச (போதி) மரம், கீரிமலையின் இரு தீர்த்தக் கேணிகள் உட்பட யாழ்ப்பாணத்தில் - வடக்கின் உச்சியில் - பழம்பெரும் இடங்களான நான்கை புராதன மையங்களாக அடையாளப்படுத்தி, அவற்றைத் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரத்துக்கு உரியனவாகக் குறிப்பிட்டு, வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.** 02

# மலையக எழுச்சிப் பயணத்துக்கு சர்வதேச அமைப்புகள் பேராதரவு!

மலையக சமூகத்தினருக்குக் காணி உள்ளிட்ட ஏனைய சம உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள், தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையிலான மலையக எழுச்சிப் பயணத்தில் பங்கேற்கும் மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த சமூகத் தலைவர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்களுடன் ஒன்றிணைவதாகவும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.


சர்வதேச மன்னிப்பு சபை (Amnesty International), மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டுக்கான ஆசிய மன்றம் 06



# தமிழ் - சிங்கள இன முரண்பாட்டை தோற்றுவிக்க ஜனாதிபதி முயற்சி!

## ‘13’ விடயத்தில் மகாநாயக்கர்கள் தலையிட வேண்டும் என்று ரத்ன தேரர் குற்றச்சாட்டு

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் – சிங்கள இன முரண்பாட்டைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன 06



## இரகசியம்



2005 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்குக் கிடைத்த மிக அருமையான வாய்ப்பை ‘கைக்கெட்டியது வாய்க்கெட்டாதமை போல’ ரணில் விக்கிரமசிங்க கோட்டை விட்டமை எங்ஙனம், அதில் நான் சம்பந்தப்பட்ட 02

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விடயங்கள் யாவை என்பவை பற்றி நேற்று இப்பத்தியில் எழுதத் தொடங்கினேன். அதை வாசிக்கத் தவறியோர் தயவு செய்து அதைத் தேடிப் பிடித்து வாசித்து விட்டு. இன்று தொடருங்கள் என விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்றிரவு கொழும்பு கொள்ளுப்பிட்டி ஐந்தாவது ஒழுங்கையில் உள்ள ரணிலின் வீட்டில் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நான் செலவிட வேண்டியிருந்தது.

நான் அச்சமயம் 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தேன். எமது நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருந்த சரவணபவனும் என்னுடன் ரணிலின் வீட்டுக்கு வந்திருந்தார். அச்சமயம் அவர் வெறும் வர்த்தகப் பிரமுகரே. அரசியலில் ஏதும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அரசியல் பக்கமே தலைவைக்கவில்லை எனலாம்.

ரணில் விக்கிரமசிங்க தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூன்று மொழிப் பிரதிகளையும் எடுத்து வைத்து, அதில் ஆங்கிலப் பிரதியை பக்கம் பக்கமாக காட்டி எங்களுக்கு ஒரு குட்டி 'லெக்சர்' வைத்தார். அந்தப் பிரதியிலேயே பல விடயங்களை சிவப்புப் பேனையினால் பக்கத்தில் கோடிட்டுக் காட்டி வியாக்கியானங்கள் செய்தார்.

நான் புலிகள் தரப்புடன் இவ்விவகாரம் பற்றி நேரில் பேசினாலும், ரணிலின் உத்தியோகபூர்வப் பிரதிநிதி ஒருவர் அவர் சார்பில் பேசுவதற்கு என்னைத் தொடர்ந்து வன்னிக்கு வர வேண்டும் என்று நான் கேட்டபோது, யாரை அனுப்பலாம் என ரணில் சிந்திக்கத் தலைப்பட்டார்.

அவரது தேர்தல் அணியில் இருக்கும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர், முன்னாள் அமைச்சர் சந்திரசேகரன் குறித்து புலிகளுக்கு நல்ல அபிப்பிராயம் இருப்பதால் அவரை அனுப்புங்களேன் என்று நான் ஆலோசனை கூறினேன்.

அப்பொழுது நேரம் நள்ளிரவை – நடுநிசியை – தொட்டிருந்தது. ரணில் விக்கிரமசிங்க யாருக்கோ தொலைபேசி அழைப்பு எடுத்து, சந்திரசேகரன் உரையாடக் கூடிய நிலையில் இருக்கிறாரா என்பதை உறுதிப்படுத்தக் கோரினார். அவர் சிங்களத்தில் தொலைபேசி மூலம் மேற்கொண்ட உரையாடலை நான் அப்படித்தான் புரிந்து கொண்டேன்.

சற்று நேரத்தில் சந்திரசேகரனே ரணிலின் தொலைபேசிக்கு தொடர்பில் வந்தார். கொழும்புக்கு வெளியில் எங்கோ ரணிலுக்கான தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு விட்டு , அப்போதுதான் கொழும்பை நோக்கி அவர் வந்து கொண்டிருந்தார். அவரை உடனடியாக தமது இல்லத்துக்கு வருமாறு பணித்தார் ரணில். சற்று நேரத்தில் சந்திரசேகரன் வந்து சேர்த்தார்.

நான் அப்போது பத்திரிகை ஆசிரியராக இருந்த போதும், அன்றைய சூழ்நிலை மற்றும் பாதுகாப்புக் கருதி கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வெளி நடமாட்டங்கள், தொடர்பாடல்களை பெரிதும் குறைத்து அல்லது தவிர்த்து இருந்தேன். அதனால் பலரோடும் தொலைபேசி மூலம் உரையாடி பரிச்சயமாக இருந்தேனே தவிர, நேரில் பழக்கம் இருக்கவில்லை. சந்திரசேகரனுடனும் அப்படித்தான்.

சந்திரசேகரன் வந்ததும் ரணில் விடயத்தை அவருக்குச் சொன்னார். விளங்கப்படுத்தினார்.

என்னைச் சுட்டிக்காட்டி, 'இவர் நாளை வன்னிக்குப் போவார். தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவார். அடுத்த நாள் அவரைத் தொடர்ந்து நீங்கள் வன்னிக்கு போய் என் சார்பில் புலிகள் தரப்புடன் பேசுங்கள்!' – என்று ரணில் விளங்கப் படுத்த, விடயத்தை ஏற்றுக்கொண்டார் சந்திரசேகரன்.

சுமார் இரண்டரை மணி நேர உரையாடலின் பின்னர் நாங்கள் ரணிலிடமிருந்து விடைபெற்று வெளியே வந்தோம். வன்னியிலிருந்து தொலைபேசி மூலம் நிலைமையை ரணிலுக்குத் தெரியப்படுத்துவேன் எனக் கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

வெளியே வரும்போது சுவாரஸ்யமான ஒரு சம்பவம் நடந்தது.

ரணிலின் வீட்டு வாசலுக்கு வெளியில் எங்களை நெருங்கி வந்த சந்திரசேகரன் "தம்பி உங்கள் பெயர்?" – என்று என்னைப் பார்த்துக் கேட்டார். எனக்குச் சிரிப்பாக இருந்தது.

"நான்தான் சுடர் ஒளி, உதயன் ஆசிரியர்" என்றேன்.

என் பேரை குறிப்பிட்டு "ஓ நீங்களா?" – என்றார் சந்திரசேகரன். இருவரும் தொலைபேசியில் மிக நெருக்கமாக உரையாடுவோம் . ஆனால் என் முகம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. அதுவல்ல, அதற்கு மேல் அவர் கூறிய விடயம்தான் சுவாரஸ்யமானது.

"இல்லை, உரையாடல் போன போக்கையும் உங்களைப் பார்த்து தலைவர் (ரணில்) பேசிய முறைமையையும் கணித்து, நீங்கள் யாரோ புலிகளின் முக்கிய உறுப்பினர் என்றல்லவா நான் நினைத்து விட்டேன்?" என்றார் சந்திரசேகரன். நான் சிரித்து விட்டுப் புறப்பட்டேன்.

அடுத்த நாள் இரவு வன்னிக்குப் புறப்பட்டு, அதற்கடுத்த நாள் காலையில் கிளி நொச்சியில் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அவர்களின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனோடு சுமார் ஒன்றரை மணி நேரம் உரையாடினேன். ரணில் தெரிவித்த கருத்துக்களை அவரிடம் ஒப்புவித்தேன். அவர் அப்போது சொன்ன கருத்துக்களும் என் பதில்களும் நிச்சயம் வாசகர்கள் அறிய வேண்டியவை.

நான் சமாதான செயலகத்தில் தமிழ் செல்வனைச் சந்தித்ததும் அவர் என்னைப் பார்த்து கேட்ட முதல் கேள்வி என்னைத் தூக்கி வாரி போட்டது.

"அண்ணே! ரணில் அரசோடு நடந்த ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் ஐந்தில்தான் நான் பங்குபற்றினேன். தாய்லாந்தில் நடந்த முதலாவது சுற்றில் நான் பங்குபற்றவில்லை. ஆனால் ஆறு சுற்றிலும் எங்கள் பக்கத்தில், எங்கள் தரப்பினரோடு நீங்கள் தவறாது நின்றீர்கள். பங்குபற்றினீர்கள். அச்சமயம் ரணில் அரசு எங்களை எவ்வாறு கிள்ளுக்கீரையாக நடத்தியது என்பதை என்னிலும் விட நீங்கள்தான் அதிகம் அறிவீர்கள். அப்படியான மனிதருக்காகவா நீங்கள் தூது வந்திருக்கின்றீர்கள்?" – என்று என்னைப் பார்த்து நையாண்டியாகக் கேட்டார் தமிழ்ச்செல்வன்.

"இல்லைத் தம்பி. நான் தூதுவன் அல்லன். அவரின் உத்தியோகபூர்வ தூதுவர் சந்திரசேகரன் எனக்குப் பின்னால் நாளை வருவார். அதற்கு முன்னர் விடயங்களை விளக்கமாகச் சொல்வதற்காக அவரிடமிருந்து (ரணிலிடமிருந்து ) தகவல்களைப் பெற்று வந்திருக்கிறேன். அவ்வளவுதான்." – என்றேன்.

அடுத்து ஒரு கேள்வியைத் தூக்கி போட்டார் தமிழ்ச்செல்வன். நான் அசந்து போனேன்.

"அண்ணே! ரணிலின் தேர்தல் விஞ்ஞாபன அறிவிப்புப் புத்தகத்தைப் பாருங்கள். நாளை தாம் ஜனாதிபதியானால் முஸ்லிம்களுக்கு தாம் என்ன செய்வார் என்று இரண்டு பக்கங்களில் விவரித்திருக்கிறார். அதுபோல மலையகத் தமிழர்களுக்கு செய்யப் போகின்ற விடயங்களையும் இரண்டு பக்கங்களில் விவரித்து இருக்கிறார். ஆனால் வடக்கு – கிழக்குத் தமிழர் குறித்து ஓரிரு பந்தியில் முடித்து விட்டார். இவரை நம்பலாமா? நம்பிப் பயன் உண்டா?" – என்று கேள்வி எழுப்பினார் தமிழ்ச்செல்வன்.

நான் அளித்த பதில் அவரைத் திக்குமுக்காட வைத்திருக்கும் என நினைக்கிறேன்.

அதன் விவரங்களை நாளை பார்ப்போமா?

---

## வடக்கின் உச்சியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு ஆட்சியாளர்களின் இந்நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ள பல இடங்களில் பௌத்த அடையாளங்கள் உள்ளன என அடையாளப்படுத்தி, அவை தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு உரியன எனத் தெரிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு வந்திருந்தன.

இதன் தொடர்ச்சியாகவே தற்போது யாழிலும் நான்கு இடங்கள் அவ்வாறு தொல்லியல் திணைக்களத்திற்கு சொந்தமானவை என அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள சங்கமித்தை அரசமரம் எனக் கூறப்படும் போதி மரம், பருத்தித்துறை கடற்கரைப் பகுதியிலுள்ள சுங்கக் கட்டடம், கீரிமலைக் கேணி கள், தெல்லிப்பளை, இளவாலை பதவதை பிலிப் நேரியார் தேவாலயம் ஆகியநான்குஇடங்கள்தற்போதுவர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நான்கு இடங்களும் அடையாளப்படுத்தப்பட்டு, அவை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு உரியன எனத் தெரிவித்து கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் இவ்வாறு சில இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தமனியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அதற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு சூழலில்தான் இப்போது புதிதாக யாழ்ப்பாணத்திலும் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு இருக்கின்றது. ஆட்சியாளர்களினால் மிகவும் இரகசியமாக முன்னெடுக்கப்படும் இத்தகைய செயற்பாடுகளுக்கு மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பறாளாய் முருகன் ஆலயத்தை ஒட்டிய அரச மரத்தை சங்கமித்தையின் இலங்கை வருகையுடன் தொடர்பு படுத்தி தொல்லியல் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தீவகத்தின் தலைவிதி!

தமிழர்களின் பூர்வீகத் தாயகமான கிழக்கு மாகாணத்தை பெருமளவில் பௌத்த, சிங்கள மயப்படுத்துவதில் வெற்றி கொண்ட பேரினவாத மேலாண்மை அடுத்துத் தனது கைங்கரியத்தை வடக்கின்பால் முழு அளவில் திருப்பியிருக்கின்றது போலும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் நேற்று வெளியிட்டிருக்கும் பகீர் தகவல் அதனைத்தான் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

வடக்கின் தீவகம் முழுவதும் மத்திய அரசின் ஓர் அதிகார சபையின் கீழ் கொண்டு வரப்பட்டு, அந்தத் தீவகத்தில் இருக்கக்கூடிய அனைத்து நிர்வாகப் பணிகளும் கொழும்பால் - மத்திய அரசால் - நேரடியாக ஆட்சி செய்யப்படுகின்ற - கையாளப்படுகின்ற - முறைமைக்கு வழி செய்கின்ற சட்ட வடிவம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படக் கூடிய தயார் நிலையில் இருக்கின்றது என்று அவர் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இந்தப் பிரதேசத்தில் அதன் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைக் கட்டமைப்புகளின் அதிகாரத்தை அடியோடு பிடுங்கி, அதனைக் கொழும்பு ஆட்சிப் பீடம் நேரடியாகப் பிரயோகிக்கும் சதித் திட்டமே இது.

யுத்தத்தினாலும் அதை அடுத்து ஏற்பட்ட சூழ்நிலைகளாலும் ஏற்கனவே தீவகப் பகுதியில் வடக்கு மக்களின் குடிப்பரம்பல் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையை வசமாகப் பயன்படுத்தி, அப்பிரதேசத்தைக் கொழும்பின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் அரச குடியேற்றத் திட்டங்களை அங்கு கட்டவிழ்ப்பதே சிங்கள ஆட்சியாளர்களின் சதி நோக்கம் என்று கஜேந்திர குமார் பொன்னம்பலம் சுட்டுகின்ற விடயம் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியது.

அவர் கூறுகின்ற விவகாரம் உண்மையானால், அது, வடக்கில் தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிப்பதில் மட்டுமல்லாமல், இப்பிரதேசத்தில் சர்வதேச நலன்கள், ஊடாட்டங்கள் போன்றவற்றிலும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது.

பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்குக் கொண்ட கொடூர ஆட்சியாளர்களின் கடந்த கால அரசியல் நகர்வுகளை நோக்கும் போது, இத்தகைய அதிரடி நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க மாட்டார்கள் என்று நம்புவதற்கு இடமே இல்லை என்பது துலாம்பரமாகும். ஆங்கிலேய சாம்ராஜ்யத்திடம் இருந்து இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த உடனேயே இந்த நாட்டின் முதுகெலும்பாக இருந்த சுமார் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கி, நடு வீதியில் நிறுத்திய கேவலமான ஆட்சியாளர்கள் இவர்கள். தங்களின் பேரினவாத மேலாண்மையை நிலை நாட்டுவதற்காக எத்தகைய எல்லைக்கும் - எத்தகைய போக்குக்கும் - செல்லக் கூடியவர்கள் கொழும்பு ஆட்சியாளர்கள் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மை.

வடக்கின் தீவகப் பகுதியில் குடிப்பரம்பல் விகிதத்தை பெருமளவில் மாற்றக்கூடிய இத்தகைய உத்தேசத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால், அது வடக்குக் கிழக்கைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களுக்கு மட்டுமல்ல, பக்கத்தில் இருக்கும் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, முழு இந்திய உபகண்டத்துக்குக் கூட மிகப் பாதிப்பான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது வெளிப்படையானது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டமை போல அத்தகைய சட்ட வரைவு ஒன்று தயாராகி இருக்குமானால், அதற்கு எதிராக உள்ளூரில், உள்நாட்டில் மட்டுமல்லாமல், சர்வதேச ரீதியிலும் பலத்த எதிர்வினைகளை - ஆட்சேபப் பிரதிபலிப்புகளை - உடன் ஏற்படுத்த வேண்டியது சம்பந்தப்பட்ட தரப்புகளின் கட்டாயக் கடப்பாடாகும்.

நம் தலைவர்கள் மட்டுமல்லாமல், இந்தப் பிராந்தியத்தின் நலனில் அக்கறையுள்ள தரப்புகளின் தலைவர்களும் என்ன செய்யப் போகின்றார்கள்? பார்ப்போமே!

முளையில் கிள்ள வேண்டிய விவகாரம் இது. தவறினால் நச்சு விருட்சமாகிவிடும்.

# 600 விரிவுரையாளர்கள் வெளியேறியுள்ளனராம்!

கடந்த 6 மாத காலப்பகுதிக்குள் 600 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது தொழிலிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் பரண ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் சம்மேளனம், கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு இடையே கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, தொழில் ரீதியான சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றமையுடன் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாக திருத்தங்களை மேற்கொள்ளப்படாவிட்டால் எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டி ஏற்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சம்மேளத்தின் தலைவர் பரண ஜயவர்தன கூறுகையில் –

கடந்த இறுதி 6 மாதங்களில் அறுநூறுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது தொழிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதன் காரணமாக பல்கலைக்கழகங்களில் சில பீடங்களை நடத்திச் செல்வதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளோம். அறுநூறுக்கும் அதிகமான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

வரிக்கொள்ளை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். போராசிரியர்கள் இவ்வாறு விலகி செல்வதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் வரிக்கொள்ளை தொடர்பில் சாதகமான தீர்மானமொன்றை மேற்கொள்ளும் என நாம் கடந்த 6 மாதங்களாக எதிர்பார்த்தோம். ஜுலை மற்றும் செப்டம்பர் மாதமளவில் எமக்கு ஏதேனும் நிவாரணங்கள் வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்தது. இருப்பினும், இதற்கு அரசாங்கம் தயார் இல்லை என தெளிவாகிறது. நாம் இது தொடர்பில் கவலையடைகிறோம்.

எனவே, எதிர்காலத்தில் கடுமையான தீர்மானமொன்றை எடுப்பது தொடர்பில் ஏனைய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி வருகிறோம். – என்றார்.

# அமைச்சருக்கு ஆளுநர் சட்டத்தரணி நோட்டீஸ்



சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமட்டிடம் 25 கோடி ரூபா நஷ்டஈடு கோரி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சட்டத்தரணி ஊடாக நோட்டீஸ் அனுபியுள்ளார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட நசீர் அஹமட் கிழக்கு மாகாண ஆளுநர் தொடர்பில் பொய்யான கருத்துக்களையும் அரச தொழில் இடமாற்றங்கள் குறித்து பிழையான தகவல்களையும் வெளியிட்டு அவற்றை கிழக்கு மாகாண ஆளுநருடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபடுத்தி கருத்து வெளியிட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சட்டத்தரணி ஊடாக நோட்டீஸில் நஷ்டஈடு கோரியுள்ளார்.

அத்துடன் இந்த நோட்டீஸ் கிடைக்கப் பெற்று 14 நாள்களுக்கும் 25 கோடி ரூபா நஷ்டஈட்டுத் தொகையைக் கிழக்கு மாகாண பாடசாலை வளர்ச்சிக்கு வழங்குமாறும், இல்லையேல் நசீர் அஹமட் மீது மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நசீர் அஹமட் வழங்கக் கூடிய நஷ்டஈட்டுத் தொகை கிழக்கு மாகாணத்தில் உள்ள 10 முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என தெரிவித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அந்த பாடசாலைகளின் பெயர் பட்டியலையும் இணைத்துள்ளார்.

# காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் 2 மாதங்களில் 12 கோடி ரூபா இரும்பு திருட்டாம்

## பிரதேச வாசிகளைச் சாடுகிறார் கூட்டுத்தாபனத்தின் தலைவர்



**யாழ். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பிரதேசவாசிகள் இரும்பு திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் சுமார் 12 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய இரும்புக்கள் திருடப்பட்டுள்ளன எனவும் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத் தர்மபிரிய தெரிவித்துள்ளார்.**

மேலும் தெரிவிக்கையில் –

தொழிற்சாலைக்கு உரிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால், தொழிற்சாலைக்கு அருகில் வசிக்கும் பிரதேசவாசிகள் தொழிற்சாலை வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து திருட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 33 வருட காலமாக தொழிற்சாலை இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் பாதுகாப்பாக இருந்த நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து வெளியேறிய பின்னர் திருட்டுகள் அதிகரித்துள்ளன.

மேலும் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இரும்புத் திருட்டைத் தடுக்கப் பாதுகாப்பு குழுவொன்றை தாம் நியமித்துள்ள போதிலும், திருட்டில் ஈடுபடும் பிரதேசவாசிகளுக்கும், பாதுகாப்புக் குழுவிற்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த கால பகுதியில் பெருமளவான இரும்புகள் திருடப்பட்டமையுடன், இரும்பு திருட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சில இராணுவத்தினரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சீமெந்துத் தொழிற்சாலைக்கு எதிராக பூநகரியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்







கிளிநொச்சி – பூநகரி பொன்னாவெளியில் அமைக்கப்படவுள்ள சீமெந்துத் தொழிற்சாலைக்கு எதிராக பொது மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்களும் மக்கள் அமைப்புக்களும் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பொன்னாவெளி எனும் பழமை வாய்ந்த கிராமத்தில் சீமெந்துத் தொழிற்சாலைக்காக பல ஏக்கர் காணியை சுவீகரித்து, பல மீற்றர்கள் ஆழத்தில் தொழிற்சாலைக்கான கல் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான முதற்கட்ட தயார்ப்படுத்தல்கள் இடம்பெறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

“விவசாய நிலங்களை அழிக்காதே”, “ஏழை மக்களின் வளங்களை சுரண்டி பிழைக்காதே“, “சுண்ணக்கல் அகழ்வு வேண்டாம்“, “சீமெந்துக் கம்பனியே வெளியேறு“ போன்ற வாசகங்களை பதாதைகளில் குறிப்பிட்டுள்ள நிலையில், அவற்றை ஏந்தியவாறும் அவ்வாறே கோஷங்களை எழுப்பியும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கல்வியங்காட்டில் கடையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றினுள் வன்முறைக் கும்பல் புகுந்து தாக்குதல் நடத்தியதில் வர்த்தக நிலைய உரிமையாளர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மூவர் அடங்கிய வன்முறை கும்பலொன்று குறித்த கடைக்குள் புகுந்து கண்ணாடி அலுமாரி, சோடா போத்தல்கள் என்பவற்றை அடித்து நொறுக்கி, கடை உரிமையாளரையும் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

உரிமையாளருக்கும் அவரது சகோதரருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இத்தாக்குதல் மேற்கொளப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தீவகம் முழுவதையும் தனி அலகாக்கி மத்தியின் கீழ் கொண்டு வரத் திட்டம்!

## கொழும்பின் சதி நகர்வு குறித்துப் பகீர் தகவல் அம்பலப்படுத்துகிறார் கஜேந்திரகுமார் எம்.பி.

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 04

தீவகம் முழுவதையும் ஓர் அதிகார சபைக்குள்ளே கொண்டு வந்து அந்தத் தீவகத்தில் இருக்கக் கூடிய அனைத்து நிர்வாக வேலைப் பணிகளும் கொழும்பால் – மத்திய அரசால் – நேரடியாக ஆட்சி செய்யப்படுகின்ற – கையாளப்படுகின்ற – முறையில் ஒரு சட்ட வடிவமொன்று தயாரிக்கப்பட்டு, அது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப் படகூடிய தயார் நிலையில் இருக்கின்றது.

– இப்படி ஒரு பகீர் தகவலை வெளியிட்டிருக்கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்று மதியம் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக இரண்டு சுற்றுப் பேச்சுகள் முடிவடைந்திருக்கின்ற நிலையில் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து மூன்றாவது சுற்றுப் பேச்சுக்காக எமக்கு மீண்டும் அழைப்பு வந்துள்ளது.

அந்த விடயத்தில் நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டமை போல தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சு என்று சர்வதேச மட்டத்தில் காட்டிக் கொண்டு, அதேநேரம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு எந்தவித தொடர்பும் இல்லாத ஒற்றையாட்சிக்குள் இருக்கக் கூடிய ஒரு கட்டமைப்பு அடிப்படையில் அரசமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தம் தொடர்பாகப் பேச அழைத்துள்ளனர்.

இது மீண்டும் மீண்டும் வடகிழக்கு வாழ் ஈழத் தமிழர்களை முட்டாளாக்குகின்ற வேலை மட்டுமல்ல, அது எந்தளவு தூரத்திற்கு ஈழத்தமிழர்களை ரணில் விக்கிரமசிங்க மதிக்கத் தயரில்லை அல்லது கணக்கெடுக்கத் தயாரில்லை என்பதையும் காட்டுகின்ற ஒரு செயலாகத்தான் இருக்கின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டமை போல – "குட்டக் குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்" என்பது போல – இதைத் தெரிந்து கொண்டு பேச்சுக்களில் கலந்து கொள்கின்ற தமிழ்த் தரப்புகள் எந்தளவு தூரத்திற்கு தமிழ் மக்களுக்குப் பேரம் பேசக் கூடிய வாய்ப்புகளை முற்றிலும் இல்லாமல் ஆக்கி, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு – அதுவும் சிங்கள மக்களே ஏற்றுக் கொள்ளாத அல்லது அங்கீகரிக்காத ஓர் ஆட்சிக்கு – முண்டுகொடுக்கின்ற ஒரு செயலாக மட்டும்தான் அது அமைகிறதென்பதை எமது மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இதில் முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவின் உண்மையான – ஒரு மோசமான – முகத்தை வெளிக் கொண்டு வரக் கூடிய விடயம் இன்றைக்கு, இன்னும் இன்னும் அம்பலமாகியிருக்கின்றது.

ஒரு பக்கம் ஏதோ பெயரில் அதிகாரப் பகிர்வு என்றும், 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதாகச் சொல்லியும் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அதே நேரம் இந்த அரசாங்கம் தீவகம் முழுவதையும் ஓர் அதிகார சபைக்குள்ளே கொண்டு வந்து அந்தத் தீவகத்தில் இருக்கக் கூடிய அனைத்து நிர்வாக வேலைப் பணிகளையும் கொழும்பால் நேரடியாக ஆட்சி செய்யப்படுகின்ற முறையில் ஒரு சட்ட வடிவமொன்று தயாரிக்கப்பட்டு, அது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப் படகூடிய தயார் நிலையில் இருக்கின்றது.

இந்த வடிவம் தயாரிப்பது குறித்து ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்குக் கடைசியாக வந்த போது ஒரு சில புத்திஜீவிகளை அழைத்து அங்கு பேசப்பட்டிருக்கின்றது. ஆகவே தீவகத்திற்கான அந்த அதிகாரக் கட்டமைப்பு என்பது மகாவலி அதிகார சபைத் திட்டத்தையும் விட மிக மோசமான வகையில் தமிழர்களின் தலைவிதியை முற்றிலும் மாற்றியமைக்கக் கூடிய வகையில் கொழும்பால் மட்டும் நிர்ணயிக்கின்ற ஓர் அதிகார சபையாகத்தான் அந்த உத்தேச வரைவுச் சட்டம் அமைந்திருக்கின்றது.

இது மிக மிக மோசமானது. ஆனால் தமிழ்த் தரப்புக்ககளுக்கு இது நன்றாகத் தெரியும். குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கே இந்த விடயம் தெரிய வருகிறதென்றால் இன்றைக்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு முண்டு கொடுக்கிற இந்தத் தரப்புகளுக்கும் இது நன்றாகத் தெரியும்.

ஆனால் தங்களை ஏதோ தேசியவாதிகள் என்று காட்டிக்கொண்டு இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ள தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ மற்றும் விக்கினேஸ்வரன் போன்ற தரப்புகளுக்கு இது நன்றாகத் தெரியும். அப்படித் தெரிந்து கொண்டுதான் படுமோசமான இந்தச் செயற்பாடுகளை மூடி மறைத்து ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமிழ் மக்கள் மட்டத்தில் வெள்ளையடித்து கொண்டிருக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் தீவக நிலப்பரப்பை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்று அதை நிரந்தரமாகக் கைப்பற்றினால் நாங்கள் தீவகத்தை இழக்க வேண்டிய நிலைமை உருவாகும் எனத் தெரிந்து கொண்டு இந்தத் தரப்பினர் ஆட்சியாளர்களுக்குத் துணை போகின்றனர்.



ஏற்கனவே தீவகத்தில் மக்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாத அளவிற்கு நிலைமைகளை உருவாக்கியமையால் மக்கள் படிப்படியாக வெளியேறிய நிலைமைதான் அங்கு இருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தச் சனத்தொகையை முற்றிலும் இல்லாமல் செய்து, சுற்றுலா போன்ற விடயங்களைக் காட்டி, அங்கு சிங்கள மயமாக்குகின்ற வேலைத் திட்டம்தான் இதற்குப் பின்னால் இருக்கின்றது.

தீவக நிலப்பரப்புகள் முழுக்க முழுக்க கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள். ஏனென்றால் இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் முக்கியமானவையாக இருக்கக கூடிய பிரதேசங்கள். அது முற்று முழுதாக சிங்களத் தரப்பிடம் தான் இருக்க வேண்டும், அது தமிழர் கையில் இருக் கூடாது என்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது.

இந்த பின்னனியில்தான் ஒன்றுமே இல்லாத 13 ஆம் திருத்தம் குறித்து இவர்கள் பேசி வருகின்றனர். அவ்வாறு 13 ஆம் திருத்தத்திற்குள் பேச்சுவார்த்தையை முடக்கி, தமிழ் மக்களுக்கு ஏதோ கொடுக்கப் போவதாகப் பொய்யைக் காட்டி, ஆனால் உண்மையில் நடக்கின்ற விடயம் இந்த அரசாங்கத்திற்கு வெள்ளையடித்து, அதேநேரம் அரசாங்கம் சிங்கள மயமாக்குகின்ற வேலைகளுக்கு அத்திபாரம் போடுகின்ற செயற்பாடுகளுக்குத் துணை போகிற நிலைமைதான் நடக்கிறது.

இந்த இடத்தில் வடக்கு – கிழக்கு தமிழர் தயாகத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுதலிக்கும் வகையில் எடுக்கப்படுகிற எந்தவொரு திட்டத்தையும் நாங்கள் ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை. முற்றுமுழுதாக நாங்கள் எதிர்ப்போம். அதற்கு எதிராக எங்கள் மக்களையும் அணிதிரட்டுவோம். அது மட்டுமில்லாமல் இந்தச் செயற்பாடுகளுக்கு துணை போகின்ற தரப்புகளுக்கு எதிராகவும் நாங்கள் எங்கள் மக்கள் பார்வையைத் திருப்புவோம் என்பதையும் கூறிக் கொள்கிறோம்.

எப்படிப் பார்த்தாலும் இந்த ஆட்சி என்பது தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு ஒரு போதும் நீதியைக்

(6ஆம் பக்கம் பார்க்க...)

## தீவகம் முழுவதையும்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொடுக்கப் போவதில்லை என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கொள்ளையடித்த ராஜபக்ஷ தரப்பின் தயவில் தங்கியிருக்கின்ற நிலையில் ரணில் விக்கிரசிங்கவின் ஆட்சி சிங்கள மக்களுக்கும் கூட நேர்மையாக நடந்து கொள்ளப் போவதில்லை என்பதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த நிலைமையை மாற்றியமைக்கக்கூடிய ஒரே வழி மக்கள் அணி திரண்டு ஒரு நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதனூடாக மட்டும்தான் கிட்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தெற்கில் எந்தவிதத்திற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆட்சி அதிகாரத்துக்கு அங்கீகாரம் – ஆணை இல்லாமல் அவர் இந்த முடிவுகளை எடுத்து நடாத்துகின்றாரோ அதே போன்று வடக்கு கிழக்கிலும் சமஷ்டிக்கான ஆணையைப் பெற்றவர்கள் இன்றைக்கு ஒற்றையாட்சிக்குள் இருக்கக் கூடிய 13 ஆவது திருத்தத்திற்குள் தமிழர் அரசியலை முடக்குவதற்கு செயற்படுகிறார்கள் என்பதை எமது மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆகவே இன்றைக்கு உண்மையான பிரதிநிதிகளைத் தீர்மானிக்க கூடிய ஆணையை வழங்கி,அந்த ஆணையை மதித்து, ஆணையின் அடிப்படையில் செயற்படக் கூடிய தலைமைத்துவத்தை தெற்கு தேர்ந்தெடுக்க விரும்புகிறதோ, அதே போலத் தான் வடகிழக்கு மக்களும் எதிர்பார்க்கின்றனர். ஏனெனில் தற்போது தமிழர் தரப்பில் இருப்பவர்கள் அரசியல் மோசடியை செய்து கொண்டு வருகின்றனர்.

சமஷ்டிக்காகத் தான் இருக்கிறோம் என்று வாக்கைப் பெற்றவர்கள், தீர்வைப் பற்றி கதைக்க வேண்டிய இந்த நேரத்தில் அந்த சமஷ்டியைப் பற்றி உச்சரிக்காமலேயே ஒற்றையாட்சிக்குள்ளே தமிழ் அரசியலை முடக்க இங்கேயும் நடவடிக்கை எடுக்கின்றனர்.

ஆகவே இரண்டு பகுதிக்கும் நடக்கிற இந்த மோசமான செயல்களுக்கு விடையாக நாடாளுமன்றத் தேர்தல் மட்டும்தான் அமையும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## இரு வேறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

35 முதல் 45 வயதுக்கு இடைப்பட்ட ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மன்னார் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஹபரணை வாரச் சந்தைக்கு அருகிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

40 முதல் 45 வயது மதிக்கத்தக்க ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலனறுவை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## தமிழ் - சிங்கள..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேரர் தெரிவித்தார்.

கொழும்பு – பொரளையில் உள்ள இலங்கை கம்யூனிசக் கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

“13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளில் மகாநாயக்க தேரர்கள் தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளோம். ஜனாதிபதியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் அனுமதி வழங்க முடியாது.” – என்றார்.

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா தலைமையிலான அரசியல் பிரிவு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொண்டது மட்டுமன்றி, பொதுஜன பெரமுனவின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுள்ளது.

இதன் பின்னணியில், லான்ஸா தலைமையிலான பிரிவினர் கடந்த செவ்வாய் மாலை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் இல்லத்தில் முக்கியக் கூட்டமொன்றைக் கூட்டியுள்ளனர்.

கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல், அந்த அரசியல் பிரிவின் எதிர்கால நடவடிக்கை குறித்த ஆலோசனைகளை மையமாகக் கொண்டிருந்தது.

நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, துமிந்த திஸாநாயக்க, ஜோன் செனவிரத்ன, லஸந்த அழகியவன்ன போன்ற அமைச்சர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த நிலையில் புதிய அணி குறித்து கருத்து தெரிவித்த சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும மற்றும் விமல் வீரவன்ஸ தலைமையிலான அணியினருக்கு ஏற்பட்ட நிலையே லான்ஸா அணியினருக்கும் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## மலையக எழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

(FORUM-ASIA), சிவிக்கஸ் (CIVICUS) மற்றும் முன்னணி மனித உரிமை செயற்பாட்டாளர்களை பாது காக்கும் அமைப்பான FrontLine Defenders ஆகிய அமைப்புகளே மலையக எழுச்சி நடைப் பயணத்தில் ஒன்றிணைகின்றன எனக் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:–

1823ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் பணிக்கா தென்னிந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்ட போது, உயிர் அச்சுறுத்தலான ஆபத்துக்களைச் சமாளித்துகொண்டு, காடுகளை அழித்தல், காட்டு விலங்குகளை துணிச்சலுடன் எதிர்கொள்ளுதல் உள்ளிட்ட பெரும் சிரமங்களுக்கும் தொழிலாளர்கள் முகங்கொடுத்தனர்.

இப்பயணத்தின்போது குறிப்பிடத்தக்களவு மக்கள் உயிரிழந்தனர்.

200 வருடங்கள் கடந்தும் இவர்கள் அமைப்பு ரீதியான பாகுபாடு உள்ளிட்டவற்றுக்கு முகம் கொடுக்கின்றமையோடு இவர்களது சம உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இலங்கையில் மலையக சமூகத்தின் சுதந்திரம் மற்றும் சமத்துவத்திற்கான கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி பயணத்தை மேற்கொண்ட தொழிலாளர்களையும் அவர்களின் போராட்டத்தையும் நினைவு கூர்வதே இந்த நடைப் பயணத்தின் நோக்கமாகும்.

அத்துடன், இந்தச் சமூகத்தின் பங்களிப்புகள், சாதனைகள் மற்றும் அவர்கள் எதிர்கொண்ட சவாலான மற்றும் பல தலைமுறைகளாக அனுபவிக்கும் கட்டமைப்பு வன்முறைகள் ஆகியவற்றை வெளியுலகிற்கு தெரியப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமுமாகும்.

மேலும், மலையக சமூகத்தினர் இலங்கையில் மிகவும் நலிவடைந்த, வரலாற்று ரீதியாக குடியுரிமை மற்றும் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டு கட்டாய நாடுகடத்தல் மற்றும் நாடற்ற நிலை ஆகியவற்றினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

மலையக சமூகத்தினருக்கு காணி, குடியிருப்பு, வாழ்வாதாரம், நியாயமான ஊதியம், கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய அரச சேவைகளில் சம உரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகிறது.

அங்கீகாரம் மற்றும் சமத்துவத்திற்கான சமூகப் போராட்டம் தொடர்வதுடன், காலனித்துவம் மற்றும் அடிமைத்தனத்தில் வேரூன்றிய பாகுபாடு மற்றும் ஓரங்கட்டப்படல் ஆகியன மலையக மக்களின் வாழ்க்கையைத் தற்போதும் பாதிப்புக்குள்ளாக்குகின்றன. – என்று சர்வதேச அமைப்புகள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்திய நாட்டின் பொருளாதாரம் அதிக வலிமை நிலைக்கு உயர்வு

## சர்வதேச வங்கி, நிதிக் கணிப்பீட்டு நிறுவனமான ‘மோர்கன் ஸ்டான்லி’ அமெரிக்காவில் அறிவிப்பு




தரகு நிறுவனமான மோர்கன் ஸ்டான்லி இந்தியாவின் பொருளாதார நிலை பற்றிய மதிப்பீட்டை “அதிக கனம்“ என்ற நிலைக்கு உயர்த்தி மாற்றிப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்திய நாட்டின் பொருளாதார சீர்திருத்தம் மற்றும் மைக்ரோ ஸ்திரத்தன்மை நிகழ்ச்சி நிரல் என்பன வலுவான முதலீட்டு உறுதிப்பாடு மற்றும் லாபக் கண்ணோட்டத்தை ஆதரிக்கிறது என்று அந்த நிறுவனம் கணக்கிடுகிறது.

உள்நாட்டு தேவை மற்றும் வெளியீடு, கொடுப்பனவுகளின் இருப்பு, நிதி வருவாய்கள் மற்றும் செலவுகள் மற்றும் சேமிப்பு அத்தோடு முதலீடு ஆகியவற்றுக்கு இடையே உள்ள உறுதிப்பாட்டை மதிப்பீடு செய்து மேற்படி மைக்ரோ ஸ்திரத்தன்மை தீர்மானிக்கப்படுகின்றது.

“அதிக கனம்“ என்ற அந்த நிறுவனத்தின் மதிப்பீடு என்பது எதிர்காலத்தில் இந்தியாவின் பொருளாதாரம் சிறப்பாக செயல்படும் என்று அந்நிறுவனம் கணிப்பிட்டிருக்கின்றமையை வெளிப்படுத்துகிறது.

அந்த நிறுவனத்தின் கணிப்பீட்டில் அமெரிக்கா ‘ஏஏஏ’ தர உயர் அந்தஸ்தை இழந்ததன் பின்னணியிலும் சீனாவில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ள சூழலிலும் அந்நிறுவனத்தினால் இந்தியப் பொருளாதாரர் தரம் பற்றிய மதிப்பீடு மேம்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் மைக்ரோ ஸ்திரத்தன்மை குறிகாட்டிகள் தொடர்ந்தும் தெளிவான நெகிழ்ச்சித் தன்மையுடன் உள்ளமையோடு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 6.2 சதவிகிதம் என்ற பொருளாதார வளர்ச்சி முன்னறிவிப்பை அடையும் பாதையில் உள்ளது என்று அந்நிறுவனம் மதிப்பீடு செய்து தெரிவித்துள்ளது.

“இந்தியா எங்கள் செயல்பாட்டில் 6 முதல் 1 வரை தர நிலையில் உயர்கிறது. ஒப்பீட்டு மதிப்பீட்டு வீழ்ச்சி அக்டோபரைக் காட்டிலும் குறைவான தீவிரத்துடன் உள்ளன. மேலும் மல்டிபோலார் உலக இயக்கவியலை மேம்படுத்தும் இந்தியாவின் திறன் குறிப்பிடத்தக்க நன்மை” என்று மோர்கன் ஸ்டான்லி ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதில் மல்டிபோலார் உலக இயக்கவியல் என்பது “அதிகார மையம் ஒன்று (ஒற்றைமுனை) அல்லது இரண்டு (இருமுனை) மேலாதிக்க சக்திகளில் குவிக்கப்படுவதற்குப் பதிலாக, பல நாடுகள் அல்லது நாடுகளின் தொகுதிகளுக்கு இடையே அதிகாரம் விநியோகிக்கப்படும் உலகளாவிய விடயம்” பற்றியதாகும்.

“பொருளாதாரத்தில் இந்தியா ஒரு விஸ்தாரமான அகன்ற அலை ஏற்றத்தின் ஆரம்பத்தில் உள்ளது. அதே நேரத்தில் சீனா ஒரு வீழ்ச்சியின் முடிவுக்கு வரக்கூடும்” என்று அந்த நிறுவன அறிக்கை மேலும் கூறியது.

நிறுவனம் சீன பங்குகள் மீதான மதிப்பீட்டை சம எடைக்கு குறைத்தது.

முதலீட்டாளர்கள் இலாபங்களை எடுப்பதற்கான அரசாங்க ஊக்க உறுதிமொழிகளால் தூண்டப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அது கூறுகிறது.

(சீனாவில்) பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், நாட்டின் தள்ளாடும் தனியார் துறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் பெய்ஜிங்கில் இருந்து வெளியாகும் மந்தமான பல வாக்குறுதிகளுக்கு மத்தியில் சீன சொத்துக்கள் சமீபத்திய நாள்களில் ஊக்கத்தை பெற்றுள்ளன. ஆனால் சொத்துகளின் மதிப்பை தளர்ச்சியுற வைக்கும் நடவடிக்கைகள் துண்டு துண்டாக வரக்கூடும் என்று இந்நிறுவன வங்கியின் ஆய்வாளர்கள் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். இப்போக்கு பங்குகள் லாபத்தைப் பேணித் தக்கவைக்கப் போதுமானதாக இருக்காது.

மோர்கன் ஸ்டான்லி நிறுவனம் இந்தியாவை குறைந்த கனம் என்ற நிலையில் இருந்து சம கன நிலைக்கு மாற்றிய சில மாதங்களுக்குப் பிறகு, மீள் பொருளாதார உயர்வை மேற்கோள் காட்டி சமீபத்திய மேம்படுத்தல் நிறுவனத்திடமிருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு உலக நாடுகளில் இயங்கி வரும் முன்னணி முதலீட்டு வங்கியான மோர்கன் ஸ்டான்லி, நரேந்திர மோடி தலைமையிலான அரசின் கீழ் இந்தியா பெரிய அளவிலான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது என முன்னர் அறிக்கை வெளியிட்டிருந்தது.

மோர்கன் ஸ்டான்லி ஓர் அமெரிக்க பன்னாட்டு முதலீட்டு வங்கி மற்றும் நிதி சேவை நிறுவனம் ஆகும். இதன் தலைமையகம் நியூயோர்க் நகரத்தின் மிட்டவுன் மன்ஹாட்டனில் உள்ள மோர்கன் ஸ்டான்லி கட்டடத்தில் 1585 பிராட்வேயில் உள்ளது. 42 க்கும் மேற்பட்ட நாடுகளில் அலுவலகங்கள் மற்றும் 60,000 க்கும் அதிகமான ஊழியர்கள், நிறுவனத்தின் வாடிக்கையாளர்களில் பெருநிறுவனங்கள், அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இதில் உள்ளனர். மோர்கன் ஸ்டான்லி 2018 ஆம் ஆண்டின் மிகப்பெரிய அமெரிக்க நிறுவனங்களின் பார்ச்சூன் 500 பட்டியலில் 67 ஆவது இடத்தைப் பிடித்தது .

மோர்கன் ஸ்டான்லி ஒரு நிதிச் சேவை நிறுவனம் ஆகும். இது அதன் துணை நிறுவனங்கள் மூலம் அரசாங்கங்கள் மற்றும் தனிநபர்களுக்கான மூலதனத்தை விநியோகிக்கிறது. மேலும் நிதி ஆலோசனை, நிதி மேலாண்மை, வர்த்தக சேவை ஆகிய சேவைகளை வழங்கி வருகிறது. நிறுவனம் மூன்று வணிகப் பிரிவுகளில் செயல்படுகிறது.

மூலம் : என்.டி.ரி.வி.

# பொலிஸ், காணி அதிகாரம் என்று கூறி

# தமிழ் அரசியல்வாதிகள் தமிழரை தவறாக உசுப்பேற்றுகின்றனராம்

## இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த வவுனியாவில் சீற்றம்

**மாகாண சபையில் பாரிய அதிகாரக் கட்டமைப்பு இருக்கும் போது பணத்தைத் திருப்பி அனுப்பி விட்டு தற்போது பொலிஸ், காணி அதிகாரம் என மக்களுக்குப் பிழையான மனோ ரீதியான உற்சாகத்தினை தமிழ் அரசியல்வாதிகள் வழங்குகின்றனர் என நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த தெரிவித்தார்.**





வவுனியா தரணிக்குளத்தில் குழாய் மூலமான நீர்ப்பாசனத் திட்டத்தைப் பெறுவதற்காக மக்களின் செலவினங்களை உள்ளடக்கி நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபைக்கு நிதி வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலம் கருத்து தெரிவித்த அவர் –

வட மேல் மாகாணசபையில் நான் உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்துள்ளேன். இதன் அடிப்படையில் பார்க்கின்ற போது தமிழ் அரசியல்வாதிகள் காணி, பொலிஸ் அதிகாரம் என மக்களுக்குப் பிழையான மனோ ரீதியான உற்சாகத்தை வழங்குகின்றனர்.

மாகாணசபை என்பது விசாலமான அதிகாரங்களை கொண்ட கட்டமைப்பு. வடக்கு – கிழக்கு மாகாணசபையில் 13 ஆம் திருத்தச்சட்டம் மற்றும் பொலிஸ், காணி அதிகரம் என கூறிக்கொண்டிருப்பதை விடுத்து 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாணசபைக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை எப்படி வெல்லலாம் எனச் சிந்திக்க வேண்டும்.

13ஆவது திருத்தச்சட்டம் ஊடாகவே மத்திய அரசும் மாகாண அரசும் சம்பந்தப்படுகின்றது. பெரு வீதிகள், ரயில், மின்சாரம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, நீதிக் கட்டமைப்பு, தேசிய பாடசாலைகள், தேசிய வைத்தியசாலைகள் தவிர அனைத்தும் மாகாண சபையின் ஊடாக செயற்படுத்தப்படும் நிறுவனங்களாகும். அவற்றை வெற்றி கொண்டு வேலைத் திட்டத்தை மேற்கொள்ள முடியும். 13 ஆவது திருத்த சட்டத்தினால் கிடைக்காத சின்னச் சின்னப் பிரச்சினைகளை விடுத்து கிடைத்ததை வெற்றி கொண்டு செயற்படுத்தப் பாடுபட வேண்டும்.

13 பற்றி பேசிக்கொண்டு வடக்கு – கிழக்கு மாகாணசபைக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியைக் கூட உரிய முறையில் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பும் நிலை காணப்பட்டது.

எனவே கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனூடாக செய்ய முடிந்தவற்றை செய்ய வேண்டும். அதனை விடுத்து கிடைக்காததற்காக காத்திருப்பது தேவையற்றது. – எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் கே. கே. மஸ்தான் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# 500 போதை மாத்திரைகளுடன் யாழ் நகரில் இளைஞர் கைது!





**எஸ்.நிதர்ஷன்**

யாழ்ப்பாணத்தில் 500 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த தலைமையிலான மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய பண்ணைப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது.

இதன் போது அப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நின்ற இளைஞரொருவரை சோதனை செய்த போது 500 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இந்த இளைஞர் யாழ் தீவுப் பகுதியான சாட்டிப் பகுதியில் தற்காலிகமாகத் தங்கிநிற்பவரென விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதை மாத்திரைகளுடன் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மிக மோசமான பின்விளைவுகள் ‘13’ ஆல் நேரும்!

## மிரட்டுகின்றார் அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, ஓகஸ்ட்

இலங்கையில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நடைமுறைப் படுத்தப்படும் போது பாரதூரமான – மிக மோசமான – பின்விளைவுகள் ஏற்படலாமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மாகாணங்களுக் குப் பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந் தளிக்கும் போது நெருக்கடிகள் ஏற் படலாமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத் தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தெற்கு வாழ் மக்கள் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக் கொள் ளக்கூடிய நீதியான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் செயல்முறையில் தேசிய, இன, மத பேதமின்றி அனைவரும் செயல்பட வேண்டுமென்பதோடு இதற்கான பொது முறையொன்றும் உருவாக்கப் பட வேண்டும்.

அத்துடன், பொலிஸ் அதிகா ரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பகிரங்க விவாதம் முன்னெடுக்கப்பட வேண்டும். சகலரும் கூட்டாக இணைந்து இந்த விடயத்தில் ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும்.

ஒன்பது மாகாணங்களுக்கு ஒன்பது பொலிஸ் பிரிவுகள் உருவாகி, 9 முதல மைச்சர்களின் கீழ் பொலிஸார் நிர்வகிக் கப்படும் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

எந்தவொரு நாடும் அவர்களுக்கு தேவையான சட்டங்களை அந்த நாட்டிலேயே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதற்காக ஒவ்வொரு நாட்டிலும் நாடாளுமன்றக் கட்டமைப்பு இருப்பதாகவும் அவர் கூட்டிக்க– ட்டியுள்ளார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் மாணவி சடலமாக மீட்பு!



யாழ்ப்பாணம் – கலட்டிப் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் தங்கியி ருந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலா மாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகா மைத்துவ பீடத்தைச் சேர்ந்த இரண் டாம் வருட மாணவி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இந்த மாணவி யாழ்ப்பாணம் – கலட்டிப் பகுதியில் உள்ள தனியார் வீடொன் றின் அறையில் வாடகைக்குக் குடியிருந் துள்ளார். இந்த மாணவி நேற்று காலை விரிவுரைகளுக்குச் செல்லாமல் தனித் திருந்தார் எனவும், சக மாணவி கள் நண்பகல் அளவில் அறைக்குத் திரும்பிவந்தவேளையில் மாணவியின் சட லத்தைக் கண்டனர் எனவும் தெரி விக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில், பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாணம் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அட்டாளைச்சேனை ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு காணி வழங்கல்



(நவாஸ்)

அட்டாளைச்சேனை ஆதார ஆயுள்வேத வைத்தியசாலைக் கான காணி ஆவானத்தை மாகாண மருத்துவ திணைக் களதுக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹிஜா முஸாபிர் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் டாக்டர் திருமதி ஆர். சிறிதரிடம் ஆவனத்தை கையளித்தார்.

இதில்மருத்துவர்எம்.ஏ.நபீல், மருத்துவர்எஸ்.அப்துல்ஹை, காணி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். றியாத், பிரதான காணி முகாமைத்துவ உத்தியோகத்தர் எஸ்.ஜே. தேவ் ஆனந்த், அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஸராபியா போன்றோர் கலந்து கொண்டனர்.

# சேவை நலன் பாராட்டு



(நவாஸ் )

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் சுமார் முப்பது வருடங்களுக்கும் மேலாக பணியாற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றுச் செல்லும் கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொது முகாமை யாளர் எந்திரி.எம்.எம்.நசீல் அவருக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு, நீர் வழங்கல் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று மென்கோ கார்டனின் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மேலதிக பொது முகாமையாளர் என்.சுதேசனும், கௌரவ அதிதிகளாக உதவிப் பொது முகாமையாளர்களான கே.விநோதன், டீ.ஏ.பிரகாஷ், பிராந்திய முகாமையாளர்களான யூ.கே. எம்.முஸாஜித், எம்.குமாரதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மலையக மக்களின் உரிமைகளில் எமக்குத் தீவிரமான கரிசனையுண்டு

## யாழ். பேரணியில் நிரோஷ்



யாழ்ப்பாணம், ஓக. 04

மலையகத் தமிழ் மக்களின் உரிமைகள் விடயத்தில் வடக்கு, கிழக்கு மக்களிடத்தில் கரிசனை மேலும் அதிகரித்துள்ளது. அதனையே இந்தப் பேரணி உணர்த்துகிறது.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ரெலோவின் யாழ். மாவட்ட பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் இவ்வாறு தெரிவித்தார்.

மலையக மக்கள் எழுச்சிப் பயணத்தின் யாழ்ப்பாணப் பேரணி நேற்று வியாழக்கிழமை (03.08.2023) யாழ். நகரில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

மலையக மக்கள் நாட்டின் பொருளாதாரததுக்காக முதுகெலும்பாக உழைத்துள்ளனர். ஆனால் இந்த நாட்டில் அதிகம் அரசியல் சமூக பொருளாதார கலாச்சார உரிமைகள் விடயத்தில் மறுக்கப்படும் ஓர் தரப்பாக அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குடியிருப்பதற்கு ஒரு துண்டு நிலத்துக்காகப் போராடுகின்றனர். ஒரு துண்டு நிலத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு மாறிமாறி ஆட்சிக்கு வந்த தரப்புக்கள் ஏமாற்றியே வருகின்றன. அதுபோல் அவர்களுடைய ஊதியம் தொடர்பான பிரச்சினை தொடர் ஏமாற்றத்துக்குரிய ஒன்றாகவுள்ளது.

உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் குறைந்தபட்ச பொதுநலப் பண்டங்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கூட ஏங்கவேண்டியுள்ளது. போராட வேண்டியுள்ளது. பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களது உரிமைகள் நிலை நிறுத்தப்படாமல் உழைக்கும் மக்களது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், தொழில் பாதுகாப்பு என அத்தனையும் கேள்விக்குள்ளாக்கப்பட்ட நிலையிலேயே மலையக மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பதையிட்டு நாடே வெட்கித் தலைகுனிய வேண்டும்.

பத்து அடி லயன் அறைகளில் குடும்பமாக வாழ முடியாது இன்றும் திண்டாடுகின்றனர். சாதாரணமாக தோட்டங்களில் தாய் மார் பிரசவத்துக்குச் செல்வதற்கே கிராமத்தில் வீதிகள் இல்லை. உண்மையில் மலையக மக்கள் மீது பிரயோகிக்கப்படும் சுரண்டல்கள் போன்று பொருளாதாரச் சுரண்டல் நிலைமையை இலங்கையில் வேறு எந்தச் சமூகங்களும் எதிர்கொள்ளவில்லை. இந்தக் கசப்பான உண்மையை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். நாங்கள் அவர்களது துன்ப துயரங்களை நேரில் பார்க்கின்றோம்.

இந்த நிலையில் மலையக மக்கள் தொடர்பாக விட்டுக்கொடுப்பின்றி செயற்படவேண்டிய பொறுப்பு வடக்கு, கிழக்கில் எமக்கு உள்ளது.

இந்தச்சுரண்டலின் மலையகபிள்ளைகள் கொழும்பிலும் நாட்டின் பிறபாகங்களுக்கும் வீட்டுப் பணிப் பெண்களாக உள்ளனர். இளைஞர்கள் பலர் கடைகளுக்கு வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இதேவேளை, மலையகத்தில் இவ்வாறாக ஒடுக்குமுறை நிலவும் போதும் அதையும் மீறி பல்துறைகளிலும் இளைய தலைமுறையொன்று முன்னேற்றம் கண்டு வருகின்றது. இந்தப் பெருமையையும் நாம் கொண்டாடுகின்றோம். –என்றார்.

# பயணிகள் நடைபாதையில் மலசல கூடத்தின் கழிவுநீர்

## கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தின் அசௌகரியம்



கிளிநொச்சி, ஓக.04

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தின் மலசல கூடத்தின் கழிவு நீர் பயணிகள் பயன்படுத்தும் நடைபாதைகளில் வெளியேறி நிற்பதால் பயணிகள் கடும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பேருந்து நிலையம் கடந்த மார்ச் மாதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பேருந்து நிலையத்தில் மலசலகூடம், குளியலறை என பல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டபோதும் உரிய பராமரிப்புகள் இன்மையால் ஐந்து மாதங்களில் முகம் சுழிக்குமளவுக்கு மாறிவிட்டது என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில பயணிகளின் பொறுப்பற்ற பயன்பாடும் இந்த நிலைமைக்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இரத்மலானையில் விபசார விடுதி சுற்றிவளைப்பு

இரத்மலானையில் ஆயுள்வேத நிலையம் என்ற போர்வையில் இயங்கிவந்த விபசார விடுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸ குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, நேற்று முன்தினம் மாலை இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபசார விடுதியின் ஆண் முகாமையாளரும் மூன்று பெண்களுமே இவ்வாறு கைதாகினர்.

வெலிமடையைச் சேர்ந்த 40 வயதுடைய ஆண் ஒருவரும், களுத்துறை மற்றும் பொல்பிட்டிஹி கமவைச் சேர்ந்த 19, 20 மற்றும் 26 வயதுடைய மூன்று பெண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர் படுத்தப்படவிருந்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.08.2023




இன்று சிறப்பான வாய்ப்புக் காணப்படும். உங்கள் தனித் திறமையை பயன்படுத்தி உங்கள் இலக்குகளை முடிப்பீர்கள். மன தில் இருக்கும் தெளிவு காரணமாக சரியான முடிவை எடுப்பீர்கள்.

அதிக பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் தனித்த திறமை மூலம் உங்கள் பணிகளில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நீங்கள் வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் நல்ல பிணைப்பை உருவாக்குவீர்கள்.

உங்கள் திறமை மற்றும் நேர்மையான முயற்சி மூலம் உங்களுக்கு கூடுதல் ஊக்கத் தொகை கிடை-க்கும். இன்றைய நாளுக்குத் தேவையான போதிய பணம் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிறந்த ஆற்றல் காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று சீரான பலன்கள் கிடைக்கும். விருந்தினர்களின் வருகை உங்களுக்கு உற்சாகமளிக்கும். அதிர்ஷ்டம் காரணமாக நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கடின உழைப்பின் காரண மாக பணியிடத்தில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களி டம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் பணிகளை மேற்கொள்வ தில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். இன்று உங்கள் பதட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

இன்று முக்கிய பணிகளை உங்களால் முடிக்க இயலாது. உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில அசாதாரணமான தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலயை அளிக்கும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்தியான மனநிலை காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான வார்த்தைகள் மூலம் அவரை மகிழ வைப்பது கடினமாக உணர்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. அதிகமாக சம்பாதித்தாலும் இன்று தேவையற்ற விஷயங்களுக்காக செலவு செய்ய நேரலாம்.




இன்று சவாலான சூழ்நிலை காணப் படும். இதனால் சமநிலை இழப்பீர்கள். நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இதனை சமாளிக்க வேண்டும். பாதகமான விளைவுகள் ஏற்படமால் இருக்க கவன மாக உரையடாவும்.

நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு ஒழுங்காக பணியாற்ற வேண்டும். உங்களின் முயற்சி சிறப்பாக இருந்தாலும் உங்கள் முதலாளிகளின் அங்கீ காரம் பெற இயலாது.

உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ள தால் மகிழ்ச்சியான போக்கை மேற்கொள்ளவேண்டும். அமைதியான போக்கு சூழ்நிலையின் தாக்கத்தை தணிக் கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் சம்பாத்தியமும் குறைவாக இருப்பதன் காரணத்தால் பணத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.




இன்று உங்கள் ஆர்வம் மேம்படும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பயணங்கள் ஏற்படலாம்.

பணியிடத்தில் ஆச்சரியமும் உற்சாக மும் காணப்படும். உங்கள் கடின உழைப் பிற்கான ஊக்கத்தொகை கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். அனுசரித்து போவதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்களுக்கு உயர்வு நிலை கிடைக்கும். இதனால் நீங்கள் அதிகம் சம்பாதிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். நிகழ்வுகள் சீராக நடக் கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள். அவற்றின் மூலம் நன்மை விளையும்.

பணியிடத்தில் சிறந்த வளர்ச்சி காணப் படும். இன்று முழுவ-தும் மும்மரமாக இருப்பீர்கள். முறை யாக திட்டமிடுவதன் மூலம் இன்று சிறப்பாக பணியாற்ற லாம்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான தருணங் களை பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

கணிசமான பண வரவு காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் நீங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக் காது. வேதனையான சூழ்நிலையில் நீங்கள் பொறுமை இழந்து உணர்ச்சி வசப்படலாம். எதையும் லேசாக எடுத் துக்கொள்வதன்மூலம்நன்மைகாணலாம். பிரார்தனை மற்றும் இறை வழிபாடு ஆறுதல் தரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. சில தவறுகள் காரணமாக வேலையில் முன்னேற்றம் காண்பது கடினம்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அவருடன் பேசும் போது நீங்கள் மென்மையான இனிமையான வார்த்தைகளை பேச வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் அஜாக்கிரதை காரணமாகப் பண இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

நடக்கும்போது கீழே விழ வாய்ப்புள்ளது. எனவே எச்சரிக்கையாக இருக்கவும்.




இன்று சில கடினமான சவாலான சூழ் நிலையை கையாள வேண்டியிருக்கும். இறைவழிபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் குழப்பமான சூழ்நிலை காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் உங்கள் துணையிடம் தீவிரமாக நடந்து கொள் வீர்கள். இந்தப் போக்கை தவிர்த்து நீங்கள் நட்போடு நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது.இதனால் கடன் வாங்க வேண்டிய சூழல் ஏற்படும்.

இன்று உடல் நிலையில் சோர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. தக்க சமயத்தில் சிகிச்சை பெறுவதன் மூலம் குணம் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.08.2023

## தனுசு

இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். உங்கள் இலக்குகள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். உங்கள் செயல்களின் மூலம் வெற்றி கிடைக்கு.

உங்கள் பணியில் நீங்கள் மிகுந்த திருப்தி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே அன்பு வளரும்.

பண வரவு உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும். அதிர்ஷ்டம் காரணமாக இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திடமான மனதின் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## கும்பம்

இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காமல் போகலாம். நீங்கள் உங்கள் சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். இந்தச் சவால்களை மேற்கொள்ள நீங்கள் திட்டமிட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது சிறந்ததல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். இதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பணத்தை பயன்படுத்த இயலாது.

## மகரம்

இன்று விரும்பும் பலன்களை அடைய கடினமாக உழைக்க வேண்டும். இன்று அனுகூலமான நாளாக இருக்காது. நீங்கள் நம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும்.

பணியிடத்து சவாலான சூழ்நிலையை நீங்கள் பொறுமையோடு சமாளிக்க வேண்டும். பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களை பாதிக்கும். இதனால் உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி காணப்படாது.

உங்கள் வீட்டு பெரியவர்களின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் பணம் சேமிப்பது குறையும்.

## மீனம்

இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழக்கும் வகையில் சில சவால்கள் காணப்படும். நன்மையான பலன்கள் காண அனுசரித்து நடக்க வேண்டும். தைரியமாக இருந்தால் சிறப்பாக உணரலாம்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.திறமையாக பணியாற்ற கவனித்து ஒழுங்கு முறையுடன் பணியாற்ற முயல வேண்டும்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தும் வாய்ப்பு உள்ளதால் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். நல்லுறவு வளர மென்மையாக நட்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான சாத்தியம் உள்ளது. உங்கள் குடும்பத்துக்காக நீங்கள் தேவையின்றிப் பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்குக் கவலை அளிக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAWAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan Group Chairman

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park